வீரமுனை அறிவுச்சுரங்கம் கல்வியகம் வெளியீடு

அறிவுச்சுரங்கம்

அஜீந்தன் ஆசானின்

5 தரம்

ARIBUCHCHURANGAM INSTITUTE VEERAMUNAI

புதிய பாடத்திட்டம்

# புலமைப்பாதை

# தமிழ்மொழி

## (தனிச்சொல்)

வெளியீடு 3

ஆசிரியர்
S.அஜீந்தன் (B.A)
077 26 333 89

இறைவன், பெற்றோர், குரு இவர்களுடைய உதவிக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் போதாது.

# தனிச்சொல்

01. அகராதி – சொற்களை அகரவரிசைப்படி குறிப்பிட்டு அவற்றின் பொருளைத் தெரிவிக்கும் நூல் அகராதி ஆகும்.

02.அகதி – போர், உள்நாட்டுக் குழப்பம் முதலியன காரணமாக அல்லலுற்று உயிரைப் பாதுகாப்பதன் பொருட்டு புகலிடந் தேடி வருபவர்.

03.அகாலமரணம் – வயது முதிர்ந்து இறக்காமல் எதிர்பாராத வகையில் இடையிலே சம்பவிக்கும் மரணம்.

04.அங்கதம் – வெளிப்படைப் பொருளில் புகழ்ந்தும் மறைப் பொருளில் இகழ்ந்தும் கூறுவது.

05.அசகாயசூரன் – எவரது துணையுமின்றி தானே தனித்து நின்று பகைவரை வெல்லும் திறன் படைத்தவன்.

06.அஞ்ஞாதவாசம் – பிறர் தம்மை இன்னாரென்று அறியாதவண்ணம் மாறுவேடம் பூண்டு மக்கள் மத்தியில் வசித்தல்.

07.அடுக்களை – வீடுகளில் சமையல் செய்யுமிடம்.

08.அடைக்கலம் – பாதுகாத்து உதவும்படி ஒருவரிடம் ஒப்படைக்கும் பொருள்.

09.அடையாள அட்டை – குறிப்பிட்ட நபரல் இவர்தாம் என்று காட்டும் நிழற் படத்துடன் கூடிய அட்டை.

10. அட்டவதானி – ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் திறன் படைத்தவன்.

11. அணிந்துரை – நூலாசிரியர் தவிர்ந்த பிறரால் ஒரு நூலின் பெருமை முதலியன விளங்க அலங்கரித்துச் சொல்லப்படுவது.

12. அணுசக்தி – அணுவின் மையமான கரு பிளக்கப்படும் போது வெளிப்படும் சக்தி.

13. அதிதி – ஒரு வைபவத்துக்கு விசேடமாக அழைக்கப்படுவர்.

14. அதிரடிப்படை – கலகங்களை விரைவாக அடக்குவதற்கெனப் பயிற்றப்பட்ட படைப்பிரிவு.

15. அத்திவாரம் – கட்டடங்களுக்கு ஆதாரமாக அடியில் இடப்படுவது.

16. அநாதர் – தாய் தந்தையரை இழந்து, ஆதரிப்பார் எவருமற்ற நிலையில் இருப்பவர்.

17. அநுதாபம் – ஒருவர் படுந் துன்பங்களைக் கண்டோர் அல்லது கேட்டோர், அவர் படுந் துன்பத்திற்காக தாமும் கவலைப்படுதல்

18. அந்தப்புரம் – அரண்மனைகளிலே அரசமகளிர் தங்குவதற்கு அமைக்கப்பட்ட தனியிடம்.

19. அந்தாதி – ஒரு செய்யுளின் அந்தம் அடுத்த செய்யுளின் முதலாக வரத் தொடுக்கப்படுவது.

20.அபிநயம் – மனக்கருத்தைக் குறிப்பாய் விளக்கும் அங்க அசைவு.

21. அரங்கேற்றம் – புதிதாய் இயற்றிய நூலை அல்லது புதிய நாட்டிய நிகழ்ச்சியை அறிஞர் பலர் கூடிய சபையிலே படித்தோ ஆடியோ காட்டி அங்கீகாரம் பெறல்.

22.அலி – ஆணும் பெண்ணுமல்லாதது.

23.அங்காடி – மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை.

24.அவிசு – உப்பின்றிச் சமைத்த பச்சையரிசிச் சாதம்.

25.அழைப்பாணை – குறித்த ஒரு நாளில் நீதிமன்றத்தில் சமூகம் தரும்படி ஒருவருக்கு நீதிபதியினால் விடுவிக்கப்படும் அதிகாரபூர்வமான கட்டளை.

26.அறம்பாடுதல் – பிறருக்கு தீங்குவிளையும் வண்ணம் அமங்கலச் சொற்களைச் சேர்த்து கவி பாடுதல்.

27.அன்பளிப்பு – அன்பின் அடிப்படையில் ஒருவருக்கு வழங்கப்படும் பணம் அல்லது பொருள்.

28.அமுதவிழா – எண்பது ஆண்டுகள் முடிவடையும் போது எடுக்கப்படும் விழா.

29.அன்பு – தொடர்புடையாரிடத்து உண்டாகும் இரக்கம்.

30.ஆச்சிரமம் – தபோதனனர் வசிக்குமிடம்.

31. ஆட்டுக்கல் – ஊறிய அரிசி முதலியற்றை ஆட்டி அரைக்கும் கல்.

32.ஆதனம் – ஒருவருக்குரிய நிலம் முதலிய சொத்துக்கள்.

33.ஆதீனம் – சமயப் பணி செய்யும் மடம்.

34.ஆதலர்சாலை – வறியவர், அங்கவீனர், முதியோர் என்பார்க்கு உண்டியும், உறையுளும் அளித்து ஆதரிக்கும் இடம்.

35.ஆத்திகன் – கடவுள் உண்டென்ற கொள்கையை உடையவன்.

36.இடுகாடு – பிரேதங்களை அடக்கஞ் செய்யுமிடம்.

37.இடையன் – ஆடு மேய்ப்பவன்

38.ஈமக்கிரியை – மயானத்தில் வைத்துப் பிரேதத்திற்கு செய்யும் கருமங்கள்.

39.உப்பளம் – உப்பு விளைவிக்கப்படும் இடம்.

40.உவமானம் – ஒரு பொருளுக்கு ஒப்பாக எடுத்துச் சொல்லப்படும் மற்றொரு பொருள்.

41. உவமேயம் – உவமானத்தால் விளக்கப்படும் பொருள்.

42.உலோகாயுதன் – உலகமும் உலக இன்பங்களும் மாத்திரமே மெய்யென்றும், கடவுளோ மறுமையோ இல்லையென்றும் நம்புவன்.

43.உலோபி – தானும் அனுபவியாது பிறருக்குங் கொடாது பணத்தைச் சேமித்து வைப்பவன்.

44.ஊதாரி – கண்மூடித்தனமாக பணத்தை வீணே செலவு செய்பவன்.

45.ஏணை – குழந்தையைக் கிடத்தித் தாலாட்டும் புடைவைத் தொட்டில்.

46.ஏற்றப்பாட்டு – நீர் இறைக்கும் போது பாடப்படும் பாட்டு.

47.ஏதிலி – அகதிகளுக்கு வழங்கப்படும் தற்கால வழக்குச் சொல்

48.ஐக்கிநாடுகள் சபை– உலகப் பிரச்சினைகளை யுத்தமின்றி சமாதானமாகத் தீர்ப்பதற்கு முயலும் சுதந்திர நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மன்றம்.

49.ஐம்புலன் – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்துணர்வு.

50.ஐம்பொறி – மெய், வாய், கண், மூக்கு. செவி என்பன

51. ஐம்பூதம் – நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐம்பொருள்.

52.ஒட்டுண்ணி – மற்றோர் உயிர்ப் பொருளிலிருந்து தன் உணவை உறிஞ்சி வாழும் பிராணி அல்லது தாவரம்.

53.ஒத்திகை – கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு மன் சரி பிழை பார்த்து திருத்தும் நிகழ்ச்சி.

54.ஒத்திவைத்தல் – ஒரு கருமத்தைப் பின்னார் செய்யலாமெனத் தள்ளி வைத்தல்.

55.ஒப்பாரி – இறந்தவரை நினைத்து மரணவீட்டில் பெண்கள் புலம்பியழும் நாட்டுப்பாடல்.

56.ஒப்புரவு – உலக நடையினை அறிந்து ஒழுகுதல்.

57.ஒற்றர் – எதிரிகள் சந்தேகப்படாவண்ணம் அவர்கள் மத்தியிலே சஞ்சாரம் பண்ணி இரகசியத்திட்டங்களை அறிந்து வந்து அரசுக்கு அறிவிப்பவர்.

58.ஓம்படை – பேணிக் காத்துத் தரமாறு ஒருவரை அல்லது ஒரு பொருளை மற்றொருவரிடம் ஒப்படைத்தல்.

59.ஓவியன் – சித்திரங்களை வரைபவன்.

60.கடவுச்சீட்டு – ஒரு நாட்டு அரசு தனது பிரஜையொருவருக்கு இன்னொரு நாட்டிலே பாதுகாப்புடன் பிரயாணம் செய்வதற்காக வழங்கும் அனுமதிச் சீட்டு.

61. கட்டுக்கதை – ஆதாரமற்ற செய்திகளைக் கொண்டு புனையப்பட்ட கற்பனைக் கதை.

62.கணனி – கூட்டல் முதலிய கணக்குகளைக் கணித்துக் காட்டும் இயந்திரம்.

63.கண்டம் – நீர் சூழ்ந்த பெரிய நிலப்பரப்பு.

64.கதவடைப்பு – தொழிலாளர்களின் எதிர்ப்பை முறியடிப்பதற்காக முதலாளிகள் மேற்கொள்ளும் நடவடிக்கை.

65.கந்தூரி – முஸ்லீம் பெரியார்களின் நினைவு விழாவின் போது அளிக்கப்படும் விருந்து.

66.கந்தை – பலவிடங்களில் கிழிந்தும் சிதைந்தும் உளதாய்த் தைக்கப்பட்ட ஆடை.

67.கப்பம் – சிற்றரசன் பேரரசனுக்கு கொடுக்கும் திறைபொருள்.

68.கம்மாலை – சிறிய அளவில் உலோக வேலை செய்யப்படும் இடம்.

69.கருத்தரங்கு – ஒரு பொருள் குறித்துப் பலரும் கருத்துத் தெரிவிக்கும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம்.

70.கலங்கரைவிளக்கம் – இரவில், மாலுமிகளுக்கு வழிகாட்டுவதற்காகக் கடலிலுள்ள கற்பாறையில் அல்லது கடற்கரையில் மிகவுயரத்தில் அமைக்கப்பட்ட விளக்குத் தம்பம்.

71. கலைக்களஞ்சியம் அறிவுத்துறைகள் அனைத்தையும் பற்றிய விடயங்களைத் திரட்டித்தரும் நூல்.

72.கவசம் – போர் வீரர், தமது உடலைப்பாதுகாக்க அணியும் இரும்பு முதலியனவற்றாலான உறை

73.களஞ்சியம் – பொருள் பண்டங்களை சேகரித்து வைக்குமிடம்.

74.கன்னிக்கவிதை – ஒருவர் முதன் முதலில் இயற்றும் பாட்டு.

75.காசோலை – பணங் கொடுக்குமாறு வங்கிக்கு எழுத்து மூலம் கட்டளையிடும் ஒரு வகைப் படிவம்.

76.காலமரணம் – முதிர்ந்த வயதில் ஏற்படும் மரணம்.

77.காவற்காடு – கோட்டையைச் சேர்ந்துள்ள அகழிக்கு வெளியே அரணாய் அமைந்துள்ள காடு.

78.குதர்க்கம் – காரண காரியத் தொடர்பற்ற வீண் பேச்சு.

79. குத்தகை – பயிர்ச் செய்கைக்கு பெற்ற நிலத்துக்காக ஆண்டு தோறும் நிலச் சொந்தக்காரனுக்கு கொடுப்பது.

80. குரவர் – அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்போர்.

81. குறிஞ்சி – மலை சார்ந்த இடம்.

82. குற்றவாளி – ஒரு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டு நீதிமன்றத்தினால் குற்றம் புரிந்தவரென நிரூபிக்கப்பட்டவர்.

83. கைம்மருந்து – ஒருவர், வைத்தியரின்றி தாமே தமது நோய்க்குச் செய்யும் மருந்து.

84. கையூட்டு – ஒரு கருமத்தை எளிதில் நிறைவேற்றற் பொருட்டு அதனோடு தொடர்புடையவருக்கு வழங்கப்படும் இலஞ்சப்பணம்.

85. கோமாளி – நாடகத்தில் நகைச்சுவை உண்டு பண்ணத் தோன்றுபவன்.

86. சகபாடி – ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன்.

87. சகோதரர் – ஒரு தாய் வயிற்றிற் பிறந்தோர்.

88. சங்கமம் – ஆறு கடலோடு கலக்குமிடம்.

89. சங்கம் – குறித்த சில நோக்கங்களுக்காக விதிகளை வகுத்துக் கட்டுப்பாட்டுடன் இயங்கும் அமைப்பு.

90. சஞ்சிகை – குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை புத்தக உருவில் வெளிவரும் பத்திரிகை.

91. சதாப்தம் – நூறு ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி.

92. சதாவதானி – ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன்.

93. சத்திரசிகிச்சை– ஆயுதங்கள் கொண்டு நோய் கண்ட இடங்களை அறுத்துச் செய்யும் வைத்தியம். (சத்திரம் – ஆயுதம்)

94. சந்தி – பல தெருக்கள் கூடுமிடம்.

95. சந்தை – பொருள்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் மக்கள் கூடிக்கலையும் இடம்.

96. சமூகம் – பொது நோக்கோடு இணைந்து வாழும் மக்கட்கூட்டம்.

97. சரணடைதல் – வேறு துணை இல்லையென ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல்.

98. சர்வாதிகாரம் – நாட்டின் எல்லா அதிகாரங்களையும் தனதாக்கிக் கொள்ளும் ஒருவனது ஆட்சி.

99. ஜனநாயக ஆட்சி மக்களால் மக்களுக்காக அமைத்துக் கொள்ளப்பட்ட ஆட்சி.

100. சிகரம் – மலையின் மிக உயர்ந்த பகுதி

101. சிரஞ்சீவி – நெடுங்காலம் வாழ்பவன்.

102. சிறுபட்டி – கட்டுக்கடங்காத இளைஞன்

103. சிற்பி – கல்லிலோ கதை முதலான பொருள் கொண்டே கண்ணாற் கண்ட உருவத்தை அல்லது கற்பனை உருவத்தை அமைப்பவன்./ சிலை செதுக்குபவன்

104. சுடுகாடு – பிரேதங்களை தகனம் செய்யுமிடம்.

105. சுயம்பு – ஒருவராலும் படைக்கப்படாது தானே தோன்றியது.

106. சுயசரிதை – ஒருவர் தாமே தம்மைப் பற்றி எழுதும் வரலாறு

107. சுனை – வரண்ட பிரதேசங்களில் தண்ணீர் கிடைக்கக் கூடிய இடத்தை அழைப்பது

108. செங்கோண்மை– அரசனது நீதிவழுவாத ஆளுகை.

109. செவிலி – வளர்ப்புத் தாய்

110. சொத்து – பணம், பண்டம், நிலபுலம் முதலிய உடைமைப் பொருள்கள்.

111. சோடசாவதானி– ஒரே சமயத்தில் பதினாறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்.

112. சோதிடம் – கிரகங்களினதும், நட்சத்திரங்களினதும் நிலையைக் கொண்டு பலாபலன்களைக் கூறும் கலை.

113. ஞானி – உலகப்பற்றை விட்டுக் கடவுளை அடையவேண்டுமென்ற தனி நோக்கோடு இருப்பவர்.

114. தசாப்தம் – பத்து ஆண்டு கொண்ட காலப் பிரிவு.

115. தசாவதானி – ஒரே சமயத்தில் பத்து விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன்.

116. தபுதாரன் – மனைவியை இழந்தவன்.

117. தலைமுறை – ஒருவர் பிறந்து மறையும் வரையுள்ள காலம்

118. தற்புகழ்ச்சி – தன்னையே ஒருவன் புகழ்ந்து கொள்ளல்.

119. தாய்மொழி – குழந்தை முதன் முதல் தாயிடமிருந்து கற்றுக் கொள்ளும் மொழி

120. தாலாட்டு – குழந்தையை உறங்கச் செய்வதற்குத் தாய் முதலியோர் பாடும் பாட்டு.

121. திணைக்களம் – ஒரு துறையைச் சேர்ந்த வேலைத் தொகுதி செய்யப்படும் இடம்.

122. திறைசேரி – அரசின் நிதி சம்மந்தமான விடயங்கள் செயற்படுத்தும் இடம்.

123. தீபகற்பம் – மூன்று பக்கமும் கடலாற் சூழப்பட்ட நிலப்பகுதி.

124. தீர்ப்பு – நீதி விசாரணையின் பின் கூறப்படுவது.

125. தீர்க்கதரிசி – எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன்.

126. தீவு – நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்டு நடுவே இருக்கும் சிறிய நிலப்பரப்பு.

127. தேசாபிமானி – தான் பிறந்த நாட்டை நேசிப்பவன்.

128. தேசியவாதி – தமது நாட்டை முழுமையாகக் கவனித்து நாட்டுப்பற்று மிக்கவராக வாழ்பவர்.

129. தொழுவம் – மாடுகள் கட்டப்படும் இடம்.

130. தொடுவானம் – வானும் கடலும் தொடும் இடம் (அடிவானம்)

131. தோப்பு – ஓரின மரங்கள் செறிந்து வளர்ந்திருக்கும் இடம்.

132. நங்கூரம் – கப்பல் முதலியவற்றை நிறுத்துவதற்குப் பயன்படுத்தும் இரும்பாலான, நுனிகளுடன் கூடிய ஒரு வகைக்கருவி.

133. நடத்துனர் – பேருந்தில் பயணசீட்டு வழங்குபவர்

134. நரகம் – பாவஞ் செய்தவர் இறந்தபின் துன்பம் அனுபவிப்பதற்காக அடையும் இடம்.

135. நாத்திகன் – கடவுள் இல்லையென்ற கொள்கையுடையவன்.

136. நாளங்காடி – காலையிலும் பகலிலும் கூடும் சந்தை.

137. நூதனசாலை – மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகப் புராதனப் பொருட்களை பாதுகாத்து வைக்கும் இடம்.

138. நூலகம் – வாசிப்பதற்காக நூல்களை தொகுத்து வைத்திருக்கும் இடம்.

139. நூற்றாண்டு விழா நூறாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா

140. நூன்முகம் – நூலாசிரியர் தமது நூலைப் பற்றி நூலின் முகப்பில் எழுதும் உரை. (முன்னுரை)

141. நெடுங்கணக்கு– தமிழில் உள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களும் ஒழுங்கு முறைப்படி அமையப் பெற்றது.

142. நொதுமலர் – பகையுமின்றி நட்புமின்றி நடுநிலையில் நிற்போர்

143. பஞ்சமாபாதகம்– கொலை, களவு, கள், பொய், குருநிந்தை என்னும் பாவங்கள்

144. பஞ்சாங்கம் – திதி, வாரம், கரணம், யோகம், நட்சத்திரம் என்னும் ஐந்து உறுப்புக்களையும் பற்றிய விபரங்களைத் தரும் நூல்.

145. பட்டமளிப்பு விழா பல்கலைக்கழகத்திலே பட்டம் பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்குவது தொடர்பாக எடுக்கப்படும் விழா.

146. பட்டிமன்றம் – அறிஞர்கள் பலர் கூடி கலையை ஆராய்வதற்கும் வாது புரிவதற்கும் உரிய மண்டபம்.

147. பரிவேடம் – சூரியனையும், சந்திரனையும் சூழ்ந்து தோன்றும் ஒளிவேடம்

148. பண்டமாற்று – பொருள்களுக்குப் பொருள்களைக் கொடுத்து வாங்கும் முறை.

149. பதிப்புரிமை – சட்டப்படி நூலாசிரியருக்கோ வேறு ஒருவருக்கோ உள்ள பிரசுர உரிமை.

150. பதிப்புரை – ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்நூலைப் பற்றி எழுதும் உரை.

151. பரோபகாரி – பிறருக்கு வாரி வழங்கி உதவுபவன்.

152. பல்கலைக்கழகம் பட்டப்படிப்புக்காக பல கலைகளையும் கற்பிக்கும் நிலையம்.

153. பழமொழி – தொன்று தொட்டு வழங்கிவரும் வாக்கியம்.

154. பழிவாங்குதல்– தீமைக்குத் தீமை செய்தல்.

155. பற்றுச்சீட்டு – பணத்தையோ பொருளையோ பெற்றுக் கொண்டமையைக் குறிக்கும் பத்திரம்.

156. பன்னசாலை – முனிவர்கள் வசிப்பதற்கு இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை.

157. பாராளுமன்றம்– மக்கள் பிரதிநிதிகள் கூடிச் சட்டங்கள் இயற்றி நாட்டை ஆளும் மன்றம்.

158. பிடிவாதம் – மற்றவர் கூறும் நியாயங்களுக்கு விட்டுக்கொடுக்காமல் தான் கொண்ட கொள்கையே சரியென வாதிடுங் குணம்.

159. பிரியாவிடை – உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் செல்லும் போது அவருடைய ஆதரவாளர்களால் எடுக்கப்படும் விழா.

160. புறங்காட்டுதல்– போரிலே தோற்றுப் பின்வாங்கி ஓடுதல்.

161. புறங்கூறல் – ஒருவர் இல்லாத போது அவரைப் பற்றி இழிவாகக் கூறுதல்.

162. புறஞ்சேரி – நகருக்கு வெளியே மக்கள் வாழுமிடம்.

163. பொன்விழா – ஐம்பது ஆண்டுகள் முடிவடையும் போது எடுக்கும் விழா.

164. போலி – ஒரு பொருளோடு உருவம் முதலியவற்றால் ஒப்புமை உடைய வேறொரு பொருள்.

165. மஞ்சரி – ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து.

166. மத்தியஸ்தர் – பல்வேறு போட்டிகளிலும் தீர்ப்பு வழங்கும் நடுவர்.

167. மரபு – தொன்று தொட்டு வழங்கிவரும் முறைமை.

168. மருதம் – வயல் சார்ந்த இடம்.

169. மலடி – மணம் புரிந்தும் பிள்ளையில்லாது இருப்பவள்.

170. மாலுமி – கப்பலைச் செலுத்துபவன்.

171. மானியம் – அரசர்கள் தமக்குக் கீழ் வாழ்வோருக்குச் சன்மானமாக வழங்கும் நிலம்.

172. முகவன் – ஒருவர் முன்னிலையில் அவரைப் பற்றிப் புகழ்ந்து கூறல்.

173. முதலுதவி – விபத்துக்களில் சிக்கியவர்களுக்கு உடனடியாக அளிக்கப்படும் சிகிச்சை.

174. முல்லை – காடு சார்ந்த இடம்.

175. முனை – கடலுக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் நிலப்பகுதி.

176. வஞ்சிப்போர் – மண்ணாசை கொண்டு ஓர் அரசன் மற்றோர் அரசன் மீது தொடுக்கும் போர்.

177. வதந்தி – உண்மையை உறுதிப்படுத்தாமலே ஊர்மக்கள் பரப்பும் ஐயப்பாடான செய்தி.